சமூகச் சீர்திருத்தம் – மொழிச் சீர்திருத்தம்

# எழுத்துச் சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தவர் தந்தை பெரியார்!

## சென்னை பல்கலைக்கழகத்தில் நடந்த திராவிட இயக்கத்தின் நூற்றாண்டு நினைவு நிகழ்ச்சியில் அமைச்சர் முனைவர் கோவி.செழியன் பெருமிதம்!



சென்னை, செப். 14-

சென்னைப் பல்கலைக்கழகத்தில்கடந்த இரண்டு நாட்களாக (11.09.2025 மற்றும் 12.09. 2025) அண்ணா பொது வாழ்வியல் மையம் மற்றும் திராவிடர் வரலாற்று ஆராய்ச்சி மையமும் இணைந்து திராவிட இயக்கத்தின் நூற்றாண்டு நினைவு நிகழ்ச்சியினை நடத்தியது. நேற்று முன்தினம் (12.09. 2025) நடைபெற்ற நிகழ்ச்சியில் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் கலந்து கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் பேசியதாவது:

தலைநகர் சென்னையில் கடந்த இரண்டு நாட்களாக அறிஞர்கள், சான்றோர்கள், ஆளுமை மிக்கவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்து வரும், திராவிட இயக்கத்தின் நூற்றாண் டினை நினைவு கூரும் இந்த மாபெரும் நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் பெருமை கொள்கிறேன்.

இன்றைய தலைமுறையினர் பெரியாரின் கருத்துகளை படித்து, தெரிந்து தெளிவுபெற இந்நிகழ்ச்சி உறுதுணையாக இருக்கும். பெரியாரின் தத்துவங்களையும், கருத்துகளையும் உலகில் எவராலும் தடுக்கவோ, முடக்கவோ, மறுக்கவோ முடியாது. ஐரோப்பிய நாடுகளில் 500 ஆண்டுகளாக பல மேதைகள் பகுத்தறிவினை மக்களிடையே எடுத்துக் கூறி, சாதிக்க முடியாததை தந்தை பெரியார் அவர்கள் 50 ஆண்டுகளில் சாதித்து தமிழ்நாட்டில் மட்டுமில்லாமல் இந்தியா முழுவதுமே பெரிய தாக்கத்தினை ஏற்படுத்தினார்.

பெரியாரின் காலத்திற்கு முன்பு, கல்வி என்பது உயர் சாதியினருக்கும் செல்வந்தர்களுக்கும் ஒதுக்கப்பட்ட ஒரு சலுகையாக இருந்தது. நமது சமூகத்தின் பெரும்பான்மையானவர்களுக்கு - குறிப்பாக பின்தங்கிய மற்றும் விளிம்பு நிலை சமூகங்களைச் சேர்ந்தவர்கள், பெண்கள் மற்றும் ஏழைகளுக்கு - கற்கும் உரிமை மறுக்கப்பட்டது. கல்வி இல்லாமல் சுதந்திரம் இருக்க முடியாது என்பதை பெரியார் தெளிவாக உணர்ந்தார். “கல்வி சமத்தவத்திற்கான திறவுகோல். அது சாதியை அழித்து ஒடுக்கப்பட்டவர்களை உயர்த்தக்கூடிய ஆயுதம்” என்று அவர் வெளிப்படையாக முழங்கினார்.

**தந்தை பெரியாரின் போராட்டங்கள்!**

சாதி மற்றும் சலுகையின் தடைகளை உடைக்க அரசாங்கக் கொள்கைகளைப் உருவாக்கி சட்டமாக்குதல் போன்ற சிந்தனைகள் சீர்திருத்தங்கள் தந்தை பெரியாரின் போராட்டங்கள் மற்றும் வாதத்திலிருந்து பிறந்தவை என்பதை இன்றைய தலைமுறையினர் தெரிந்து கொள்ள வேண்டும்.பாகுபாடு இல்லாமல் அனைவருக்கும் கல்வி, கற்றல் மூலம் பெண்களுக்கு அதிகாரம் அளித்தல், மூடநம்பிக்கை மற்றும் குருட்டு நம்பிக்கையிலிருந்து விலகுதல், கற்றலை அணுகக்கூடியதாகவும் அர்த்தமுள்ள தாகவும் மாற்ற தமிழை கற்பித்தல் மொழியாக ஊக்குவித்தல்அவரது அயராத முயற்சிகள் இல்லாமல் இருந்திருந்தால் பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த மில்லியன் கணக்கான மாணவர்களுக்கு வாய்ப்புகள் மறுக்கப்பட்டிருக்கும்.

ஒரு பெண் கல்வி கற்கும் போது, ஒரு முழு குடும்ப மும், சமூகமும் மேம்படும் என்பதால் பெண்களுக்கு பெரும்பாலும் பள்ளிப்படிப்பு மறுக்கப்பட்ட காலத்தில், பெரியார் பெண்களின் கல்வி உரிமைக்காக போராடினார். குழந்தை திருமணத்தினை எதிர்த்தார். விதவை மறுமணத்தை ஆதரித்தார். ஆண்களைப் போலவே பெண்களுக்கும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் சேர வாய்ப்பு வழங்க வலியுறுத்தினார். அவரது தொலைநோக்குப் பார்வையால், தமிழ்நாடு இன்று பெண் கல்வியறிவு மற்றும் அதிகாரமளிப்பில் முன்னணியில் உள்ளது. பெண் உரிமைக்காக ஆயுட்காலம் முழுவதும் தந்தை பெரியார் பாடுபட்டார். கல்வி, வேலை வாய்ப்பு, அரசியல் மற்றும் குடும்பம் என ஒவ்வொரு இடத்திலும் பெண்களுக்கு சம உரிமைகள் கிடைக்க வித்திட்டார்.

வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்கும் உரிமை, பெண்களின் கல்வி உரிமையை ஆதரித்தார். குழந்தை திருமணம், வரதட்சணை மற்றும் கட்டாய விதவை போன்ற அடக்குமுறை பழக்கவழக்கங்களுக்கு தந்தை பெரியார் முற்றுப்புள்ளி வைத்தார். பெற்றோர்கள் தங்கள் மகள்களை சுமையாகக் கருதாமல், அவர்களுக்கும் கனவுகள் மற்றும் உரிமைகள் கொண்டவர்களாக மதிக்க வேண்டுமென வலியுறுத்தினார்.பெண்கள் அரசியல், ஆட்சி மற்றும் தலைமைப் பொறுப்புகளில் பங்கேற்க ஊக்குவித்தார்.இன்று பெரியாரின் இடைவிடாத போராட்டத்தினால் தான்தமிழ்நாட்டில் பெண்களின் கல்வியறிவு விகிதம்உயர்ந்துள்ளது. கல்வி, வணிகம், அரசியல் மற்றும் ஒவ்வொரு தொழிலிலும் சிறந்து விளங்குகின்றனர்.

**தமிழ்மொழி கலாச்சாரத்தின் எழுச்சி!**

பெரியார் மற்றும் கலைஞர் இடையேயான உறவு ஒரு வழிகாட்டி மற்றும் சீடர் உறவு. பரஸ்பர மரியாதை மற்றும் தமிழ் சமூகத்திற்கான ஒரு பொதுவான கனவின் அடிப்படையில் கட்டமைக்கப் பட்டது.பெரியாரை தனது வழி காட்டும் ஒளியாக எப்போதும் மதித்து, அவரை திராவிட இயக்கத்தின் வேராக கொண்டார் கலைஞர்.பெரியாரின் போராட்டம் முதன்மை யாக சமூக ரீதியாகவும், சாதி மற்றும் மத படிநிலைகளுக்கு சவால் விடுவதாகவும் இருந்தது.கலைஞர் அதே கொள்கைகளை அரசியல் அரங்கில் கொண்டு சென்றார்.அவை சட்டங்கள், கொள்கைகள் மற்றும் நிர்வாகத்தில் நிலை நிறுத்துவதை உறுதி செய்தார். கலைஞரின் தலைமையின் கீழ், தமிழ்நாடு பெரியாரின் சித்தாந்தத்தை பிரதிபலிக்கும் வரலாற்று சீர்திருத்தங்களைக் கண்டது. அவை, பின்தங்கிய மற்றும் ஒடுக்கப்பட்ட சமூகங்களுக்கு அதிகாரம் அளிக்கும் இடஒதுக்கீடு கொள்கைகள்.பெண்களின் அதிகாரமளிப்பு முயற்சிகள், கல்வி மற்றும் சம உரிமைகளை ஊக்குவித்தல்.சாதி மற்றும் மூடநம்பிக்கையில் வேரூன்றிய பாகுபாடான நடைமுறைகளை ஒழித்தல்.தமிழ்மொழி மற்றும் கலாச்சாரத்தின் எழுச்சி, சுயமரியாதை மற்றும் அடையாளத்தை வலுப்படுத்துதல்.

**சிறப்பான ஆட்சி நடத்தும் முதல்வர்!**

பெரியாருக்கும் கலைஞர் அவர்களுக்கும் இடையிலான பிணைப்பு, உண்மையான முன்னேற்றத்திற்கு சிந்தனை மற்றும் செயல் இரண்டும் தேவை என்பதை நமக்கு நினைவூட்டுகிறது. பெரியார் சிந்தித்தார், கேள்வி எழுப்பினார், சவால் செய்தார் - மாற்றத்திற்கான அடித்தளத்தை அமைத்தார்.கலைஞர் அந்த இலட்சியங்களை தன் ஆட்சி அதிகாரத்தின் மூலம் செயல்படுத்தினார், கட்டமைத்தார் மற்றும் நிறுவனமய மாக்கினார். இதனை மேலும் மெருகூட்டிட இந்தியாவிற்கே எடுத்துக் காட்டாக சமூக நீதியினை நிலைநாட்டி திராவிட மாடல் ஆட்சியினை நடத்தி வரும் முதலமைச்சர் அவர்கள் ஏழை எளிய கிராமப்புற மாணவிகள் உயர்கல்வி பெற வேண்டும் என்ற நோக்கில் புதுமைப்பெண் திட்டம், சமூக முன்னேற்றத்திற்கு பொருளாதாரம் ஒரு தடையாக இருக்கக்கூடாது என்பதற்காக குடும்பத் தலைவிகளுக்குமாதம் ரூ.1000/ மகளிர்களுக்கான இலவச விடியல் பயணத்திட்டம் போன்றவற்றை செயல்படுத்தி வருகிறார்.

.இன்று நாம் திரும்பிப் பார்க்கும்போது, தமிழ்நாட்டின் முன்னேற்றம் - சமூக நீதி, கல்வி மற்றும் சமத்துவம் - அவர்களின் ஒருங்கிணைந்த மரபின் நேரடி விளைவாகும் என்பதை நாம் உணர்கிறோம்.

பெரியாரின் தத்துவங்கள், கருத்துகள் உலகம் முழுவதும் பரவியுள்ளது. திராவிட சித்தாந்தத்தினை நினைக்காத மனிதர்கள் இச்சமுதாயத்தில் இருக்க முடியாது. தன்னுடைய முதுமையான வயதிலும் கண்ணாடி அணிந்து பூதக் கண்ணாடியை வைத்து படித்து நமக்கு பகுத்தறிவினை அளித்தவர் தந்தை பெரியார். உலகிலேயே சமூக சீர்திருத்தம், மொழி சீர்திருத்தம் மற்றும் எழுத்து சீர்திருத்தங்களை கொண்டு வந்தவர் தந்தை பெரியார் அவர்கள். அண்டை மாநிலங்களில் பெயருக்கு பின்னால் சாதியின் பெயரை பயன்படுத்துவது வழக்கம். ஆனால் தமிழ்நாட்டில் தான் பெயருக்கு பின்னால் B.A, M.A, Ph.D. என தான் பெற்ற கல்வித் தகுதியினை பயன்படுத்தும் வழக்கம். மனிதனை மனிதனாக்க திராவிட இயக்கத்தினால் தான் முடியும். யாருக்குமே கிடைக் காத பெரியார் தமிழ் இனத்திற்கு கிடைத்தது குறித்து உலகமே நம்மை பார்த்து வியக்கிறது.வரலாற்று பேராசிரியர் அய்யா வீரமணி அவர்கள் தன் வாழ்நாள் முழுவதும் தந்தை பெரியார் அவர்களின் கொள்கையினை, கோட்பாட்டினை கொண்டு வாழ்ந்து வருகிறார்.இன்றைய தலைமுறையினருக்கு இவர் ஒரு சிறந்த எடுத்துக் காட்டு. தந்தை பெரியாரின் தத்துவங்களையும், கருத்துகளையும் இன்றைய தலைமுறையினர் படித்து, தெரிந்து தங்களை தெளிவாக்கி கொள்ள வேண்டும் என்றும், பகுத்தறிவினை வளர்த்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் பேசினார்.

## பேரறிஞர் அண்ணா பிறந்தநாள்!



பேரறிஞர் அண்ணா
காஞ்சித் தலைவனின்
பிறந்த நாள்
திராவிட முன்னேற்றக்
கழகத்திற்கு சிறந்த நாள்
பெரியார் வழிவந்தவரின்
பொன்னான நாள்
பேச்சால் ஈர்த்தவரின்
பெருமைமிகு நாள்
எளிமையாய் என்றும்
இருந்தவர் அண்ணா
இயல்பாய் அறிவார்ந்த
சிந்தனையாளர் அண்ணா
தரணியில் தனித்தன்மை பெற்றவர் அண்ணா
தமிழே மூச்சு என்று வாழ்ந்தவர் அண்ணா
திராவிட முன்னேற்ற கழகத்தின் வேரே அண்ணா
திறமையான பேச்சில் நிமிர்ந்தவர் அண்ணா
நூல்கள் பல படித்தவர் அண்ணா
நுணுக்கங்கள் தானாய் அறிந்தவர் அண்ணா
பக்குவமும் பண்பும் கொண்டவர் அண்ணா
பகுத்தறிவு கொள்கையை கடைபிடித்தவர் அண்ணா
சுய சிந்தனையோடு ஆற்றல் வளர்த்தவர் அண்ணா
சுயமரியாதையை
தன்னுள் இணைத்தவர் அண்ணா
தேசம் போற்ற உயர்ந்தவர் அண்ணா
தென்னாட்டு பெர்னாட்ஷாவானவர் அண்ணா
தமிழக முதல்வராய் முடி சூடியவர் அண்ணா
“தமிழ்நாடு” என்று பெயர் வைத்தவர் அண்ணா
காஞ்சிப் புத்தன் என அறியப்பட்டவர் அண்ணா
கடமை கண்ணியம் கட்டுப்பாடு உரைத்தவர் அண்ணா
நம் இதயம் தனில் அன்பால் நிறைந்திருப்பவர் அண்ணா
நாளும் புகழோடு வாழ்பவரே பேரறிஞர் அண்ணா

**-முருக.சண்முகம்**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அ.கிட்டு (எ) கிருஷ்ணன்

**செப்டம்பர் 14 (2017)**



**திராவிடர் கழகத்தில் பணியாற்றி, கழகம் துவங்கியவுடன் அதில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றிவர்.**

**1957ல் பேராசிரியர் அன்பழகனார் அவர்களைஅழைத்து வந்து அம்மாபேட்டை கிளைக் கழகத்தை உருவாக்கி அப்பகுதியில் கழகத்தை வளர்த்தவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# ஒளி வீசிய அண்ணன் கோ.சி.மணி எனும் கொள்கைத் தீபம்!

**(செப்டம்பர்13–பிறந்தநாள்)**



சோழ மண்டலத்தின் கழகக் காவலர், நினைவில் வாழும் அண்ணன் கோ.சி.மணி அவர்களின் பிறந்தநாள் செப்டம்பர் 13.

பெரியார், அண்ணா, கழகம் பிறந்த மாதத்தில் பிறந்தவர்.

பெரியார் தந்த சுயமரியாதைத் தினவுடன்,

அண்ணா வழங்கிய குடும்பப் பாச உணர்வுடன்,

முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் தன் மீது பொழிந்த அளப்பரிய அன்பின் வலிமையுடன், இறுதி மூச்சு அடங்கும்வரை உறுதியுடன் இயக்கத்தைத் தஞ்சை மண்டலத்தில் தகத்தகாயமாக வழிநடத்தியவர்.

அண்ணா இவர்மீது கொண்டிருந்த நன்மதிப்பு,

கலைஞர் இவர்மீது வைத்திருந்த நம்பிக்கை,

தமிழ்நாட்டின் தன்னிகரற்ற முதலமைச்சர் மாண்புமிகு தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் தன் தந்தைக்கு நிகராக இவரிடம் காட்டிய உயர் மரியாதை மிக்கப் பேரன்பு,

தொண்டர்களுடனான எளிமை நிறைந்த தோழமை, கட்சி வேறுபாடின்றி மக்களிடம் பெற்றிருந்த மகத்தான செல்வாக்கு,

உள்ளத்தில் நேர்மை, ஓயாத உழைப்பு,

ஒரே கொள்கையில் நடைபோட்ட இலட்சிய உறுதி!

இவற்றின் மொத்த வடிவம்தான்

“ கொள்கைமணி” அண்ணன் கோ.சி.மணி அவர்கள் என்பதை நாடே அறியும்.

அந்தக் காலத்தில் வேரூன்றியிருந்த காங்கிரஸ் கட்சி, கீழத் தஞ்சை மாவட்டத்தில் கிராமங்கள்தோறும் விழுது பரப்பியிருந்த

பொதுவுடைமை இயக்கம் போன்ற அமைப்புகளை மீறிக் கழகத்தின் கோட்டையாகச் சோழ மண்டலத்தை மாற்றியமைத்திடும் களப்பணியில்,

இவரின் கடும் உழைப்பு, தியாகம் பற்றி ஒரு கட்டுரையில் விவரித்துவிட முடியாது.

தாக்கவரும் எதிர்ப்புகளையெல்லாம் தகர்த்தெறிந்து

ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தின் எட்டுத் திசைகளிலும் இருவண்ணக் கொடியைப்

பட்டொளி வீசிப் பறக்கச் செய்த வீரத்திருமகன்!



கவிச்சுடர்
**கவிதைப்பித்தன்**

பாரம்பரியப் பணக்காரர்களான பண்ணையார்கள் சிலரின் நெறிபிறழ்ந்த போக்கினை,

கோடீசுவரக் குபேரர்களான நிலக்கிழார்கள் பலரின்

அதிகாரபலம் படைத்த ஆதிக்க வன்கொடுமையினை,

துணிச்சலுடன் எதிர்கொண்டு துவம்சம் செய்தவர்.

தோள்கொடுத்துப் பாட்டாளி மக்களுக்கு வாழ்நாள் முழுவதும் துணைநின்றவர்.

“மேக்கிரி மங்கலத்தின் போக்கிரி” என்று கலைஞர் அவர்களால் செல்லமாகப் பாராட்டப்பட்டவர்.

அமைச்சர் உள்ளிட்ட அத்தனைப் பொறுப்புகளிலும் நூறு விழுக்காடு தனித்தன்மையுடன் தன் கடமையினைச் செம்மையாக நிறைவேற்றி, மக்கள் மனத்திலும்

தலைவர் உள்ளத்திலும் நிலைத்த இடத்தைப் பெற்ற பெரும்புகழுக்கு உரியவர்.

ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில் விரல் நீட்டும் திசையில் கழக மறவர்களை வினைபுரிய வைத்துக் “கழகத்தின் கோட்டை தஞ்சை” என்பதை நிலைநாட்டிநிறுவியவர். இவர்

மாவட்டச் செயலாளராக இருந்த காலம், போற்றுதலுக்குரிய சோழ மண்டலத் தி.மு.க.வின் பொற்காலம் என்பதை வரலாறு கூறும்.

ஆடுதுறைச்சாலையின் இவர் இல்லம், அறிவகம்! அன்பகம்! அறிவாலயம்! மொத்தத்தில் அது, கழகத் தோழர்களின் சரணாலயம்!

சமையற்கட்டில் எரியும் நெருப்பு! அணையா அடுப்பு! நள்ளிரவு சென்றாலும் அயிரை மீன் குழம்புடன் உண்டு, உறங்கித் தங்கிச் செல்லலாம்.

எழுதும்போதே கண்கள் பனிக்கின்றன… இந்த அனுபவம் வாய்த்தவர்களுக்குத்தான்,

“ சுகமான இந்தச் சோகத்தின்” அடர்த்தி புரியும்.

அவரின் ஒவ்வொரு பிறந்த நாளிலும், வழக்கம்போல் விறுவிறுப்பான விருந்துக்களம் விடிகாலையிலிருந்தே தொடங்கிவிடும். காலைச் சிற்றுண்டி, பகல் உணவு என்று, அந்த நாளில், அங்கே சாப்பிடுவதையும், அண்ணன் அவர்களின் வாழ்த்துகளைப் பெறுவதையும் வாழ்நாள் கடமையாகவே கருதியிருந்தவர் பல்லாயிரக்கணக்கானோர் ஆவர்.

மாலையில் சாலையோரத்தில் அமைந்த எளிமையான மேடையில் பிறந்தநாள்விழா வாழ்த்தரங்கம், கருத்தரங்கம், கவியரங்கம், பட்டிமன்றம், இசையரங்கம் என ஒவ்வோர் ஆண்டும் பின்னிரவைக் கடந்தும் எழுச்சிமிகு நிகழ்ச்சிகளாக நடைபெறும் அந்தப் பசுமையான நினைவுகள், இன்றும் கொஞ்சம் கூட மாறாமல், நெஞ்சம் முழுவதும் நீங்காமல் நின்று ஒளி பரப்பிக்கொண்டுள்ளன.

இரண்டாண்டுகட்கு முன்பு, இரவு 7.30 மணியிருக்கும். சிதம்பரத்திலிருந்து திரும்பி வரும்வழியில், ஆடுதுறையில் அண்ணன் வீட்டுக்குச் செல்ல வேண்டும் என, வழக்கம்போல் விரும்பினேன்.

ஊர்வந்து, அவர் வீடும் கடந்து கார் சென்றுவிட்டது.

மீண்டும் காரைத் திருப்பிக் கொண்டு, இதுதான் அண்ணன் வீடு என்று உறுதிப்படுத்தி இறங்கினேன். இந்தக் குழப்பத்திற்கு என்ன காரணம்? எப்போதும் இரவு நேரத்தில் பகல்போல் வெளிச்சம் தரும், கூடத்து விளக்குகள் அனைத்தும் அணைக்கப்பட்டிருந்தன. உள்ளே சென்று, விளக்கைப் போட்டு, குடும்ப உறுப்பினர்கள் வெளியில் வந்ததும், அந்த “இலட்சிய வேங்கையின்”

திருவுருவப் படத்தை வணங்கி விடை பெறும்போது,

“தயவு செய்து இந்த வீட்டின் கூடத்து விளக்கை இனி இரவில் அணைக்காதீர்கள்.

ஈடும் இணையும் இல்லாத எங்கள் அண்ணன் கோ.சி.மணி என்னும் கொள்கைத் தீபம் ஒளி வீசிய இலட்சியமாளிகை இது!

சாலையில் பயணம் செய்கின்றவர்கள் இந்த இல்லத்தைப் பார்த்துக்கொண்டே செல்லும்போது ஒருவிதப் பரவசம் உருவாகும்.

மாமனிதர் வாழ்ந்த வீடல்லவா! எனும் பெருமிதம் பெருகும்!”

என்று உரிமையுடன் வேண்டுகோள் வைத்தேன்.

தீரர்! தியாகசீலர்! திராவிடப் பேரியக்க வரலாற்றில், சோழமண்டல அத்தியாயத்தின் சுடர்மிகு புகழாளர்,

அண்ணன் கோ.சி.மணி அவர்களின் பிறந்தநாளில்(செப்டம்பர் 13)

சமத்துவம், சமதர்மம், சகோதரத்துவம் தழைக்கவும்,

தமிழின விடிவெள்ளி, நல்லாட்சி நாயகர்

மாண்புமிகு முதல்வர் வணக்கத்திற்குரிய தளபதி அவர்களின் பொற்கால ஆட்சியில் சமூக நீதி வெல்லவும் சூளுரைப்போம்!

வாக்குச்சாவடிகள் தோறும் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி!

# திருப்பத்தூர் மாவட்டத்தில் பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் பேரணி!

## மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. அறிக்கை!

திருப்பத்தூர் செப்.14-

திருப்பத்தூர் மாவட்டச் செயலாளர், க.தேவராஜி எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:



திருப்பத்தூர் மாவட்டத்திற்கு உட்பட்ட வாணியம்பாடி, ஆம்பூர், ஜோலார்பேட்டை, திருப்பத்தூர் ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் உள்ளடங்கிய ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நாளை (15.09.2025-திங்கள்கிழமை) காலை 8.00 மணியளவில் அவரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தி உறுதி மொழியை ஏற்று அதன் புகைப் படங்களை மக்களுடன் ஸ்டாலின் Appஇல் பதிவேற்றிடுமாறும், அந்தந்த வாக்குசாவடிக்குட்பட்ட மாநில,மாவட்ட,ஒன்றிய,நகர பேரூர் கழக நிர்வாகிகள் சார்பு அணியினர் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்படுகிறது. அதனை தொடர்ந்து திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க. சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நாளை (15.09.2025-திங்கள்கிழமை) காலை 10.00 மணியளவில் திருப்பத்தூர் நகரில் உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலை அருகில் இருந்து பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலை வரை பேரணியாக சென்று பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாவட்டச் செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க. தேவராஜி எம்.எல்.ஏ. தலைமையில் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப் படுகிறது.

இந்நிகழ்ச்சியில் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், நகர மன்ற, ஒன்றிய குழு, பேரூராட்சி தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்கள், மாவட்ட கவுன்சிலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், கிளைக்கழக, வார்டு கழக நிர்வாகிகள் பெரும் திரளாக கலந்து கொண்டு பேரறிஞர் அண்ணா அவர்களின் புகழை போற்றிடுமாறு கேட்டுகொள்ளப்படுகிறது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.